**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | திரு. முத்துசாமி |
| Father's Name/Husband Name: | | திரு. சன்னாசி |
| Village | : | வெண்கலம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 60 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025.

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1, 4 எதிரிகள் ஆஜர் இல்லை அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயசீலி எனது மனைவி. எதிரிகள் சத்யா, செல்வம், தீபக் மற்றும் பாலம்மாள் ஆகியோர்களை தெரியும். எதிரி செல்வம் மற்றும் தீபக் தற்போது உயிருடன் இல்லை. சுமார் 12 வருடத்திற்கு முன்பு என் மனைவி வாசலில் வைத்து சமைத்து கொண்டிருந்தார். அப்போது எதிரி சத்யா சாக்கடை தண்ணீரை கூட்டும்போது அது சாப்பாட்டில் தெளித்தது. அதற்கு என் மனைவி ஏன் டிச்சி (சாக்கடை) தண்ணீரை சாப்பாட்டில் தெளிக்கிறாய் என்று கேட்டதை எதிரி சத்யா எதிரி செல்வத்திடம் சொல்லி எதிரி செல்வம் குத்துக்கோலால் எனது மனைவியின் தொண்டையில் குத்திவிட்டார். கோவிலில் அலகு குத்தும் நபர்களை அழைத்துவந்து அந்த குத்துக்கோலை பிடுங்கிவிட்டு எனது மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எதிரி சத்யா, பாலம்மாள் இறந்தபோன தீபக், சத்யாவின் கணவர் செல்வம் ஆகியோர்களை

அனைவரும் சேர்ந்து என் மனைவி குழந்தைகளை அடித்தார்கள். எனது மனைவியை 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கே சிகிச்சை அளிக்க முடியாது என்று சொல்லிவிட்டதால் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி மற்றும் மாதம் குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். சம்பவம் இரவு 10.30 மணிக்கு நடந்ததால் அருகில் இருப்பவர்கள் தூங்கி கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.